# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.159/2020

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனியாண்டி வா.சா.–2 | | |
| த/பெ. | திருநாவுக்கரசு | | |
| கிராமம் | | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 40 |

---

முதல் விசாரணை 04.06.2026.

நான் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியர்–2 ஆக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சியம் அளிக்க இன்று ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களின் அசலை இந்நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். 03.11.2023ம்தேதி தம்மநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ராமசந்திரன் என்பவர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் கீழக்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. சாட்சி அழைப்பாணையில் கண்ட தம்மநாயக்கன்பட்டி கிராம சர்வே எண்.19/1க்குரிய கணினிப்பட்டாவின் இணையதள நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும்.

2. மேற்படி சர்வே எண்.19/1க்குரிய அ பதிவேட்டின் சான்றிட்ட நகல்

**சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. புல எண்.19/1 க்குரிய புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. புல எண்ணுக்குரிய சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. புல எண்.58/4 க்குரிய கணினிப்பட்டாவின் இணையதள நகல் **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. மேற்படி சர்வே எண்.19/1 க்குரிய அ பதிவேட்டின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. புல எண்.58/4 க்குரிய புலவரைபடத்தின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. புல எண்ணுக்குரிய சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. நீதிமன்றத்திலிருந்து சார்பு செய்யப்பட்ட அழைப்பாணை சார்பு நகல் **சா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. சாட்சியின் அடையாள அட்டை நகல் **சா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S